‘கேலோ இந்தியா’ பாரா விளையாட்டுப் போட்டிகள் -2025-இல் வெற்றிபெற்ற 62 மாற்றுத்திறன் வீரர்களுக்கு ரூ.1.11 கோடி உயரிய ஊக்கத் தொகை!

# உங்களின் வெற்றியை நம் அரசின் வெற்றியாக நம் முதலமைச்சர் கருதுகிறார்!

## சென்னை விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஏப்.11-**

**சென்னையில், கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் 2025இல் வெற்றிபெற்ற 62 தமிழ்நாட்டு வீரர்களுக்கு ரூ.1.11 கோடி உயரிய ஊக்கத் தொகையை நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.**

இதைத் தொடர்ந்து, அவர் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள மாற்றுத்திறன் வீரர்களின் தேவைக்காகவும் உபகரணங்களை வாங்குவதற்காகவும் சுமார் ரூ.9 இலட்சம் அளவிலான நிதியை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து வழங்கினார்.

விழாவில் வாழ்த்திப் பேசிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், “அனைவருக்கும் உதாரணமாகவும் உத்வேகமாகவும் திகழும் மாற்றுத்திறன் வீரர்களைத் தொடர்ந்து ஊக்குவிப்போம், அவர்களின் முயற்சிகள் வெல்லட்டும்” என்று குறிப்பிட்டார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

கேலோ இந்தியா பாரா கேம்ஸ்2025 இல் (Khelo India Para Games 2025) 74 பதக்கங்களை வென்ற 62 தமிழ்நாட்டு வீரர்களுக்கு ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் அளவில், உயரிய ஊக்கத்தொகை வழங்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை!**

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் படைத்துள்ள உங்களின் திறமையை அங்கீகரிக்க வேண்டும். மேலும் உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மேடையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து ரூ.11 இலட்சம் அளவிலான நிதி உதவியை ஸ்பீடு ஸ்கேட்டிங், சைக்கிளிங் மற்றும் தடகள வீரர்கள் 6 பேருக்கு வழங்குகிறோம். நம்முடைய அரசைப் பொறுத்த வரை, மாற்றுத்திறனாளிகளுடைய வெற்றி என்பது மிகவும் தனித்துவமான வெற்றி. பெருமிதமான வெற்றி. தமிழ்நாடு மாற்றுத்திறனாளி வீரர்கள், இன்றைக்கு உலகம் முழுக்க சாதனைகளைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறீர்கள். அதற்கு உதாரணமாகத்தான் இந்த மேடையில் 2 வீரர்களை நாங்கள் அமர வைத்து இருக்கிறோம்.

**பாராட்டுகள், வாழ்த்துகள்**

மாற்றுத்திறனாளி தடகள வீரர் தம்பி ரமேஷ் சண்முகம், இங்கு வருகை தந்துள்ளார். சமீபத்தில், டெல்லியில் நடைபெற்ற கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டுகளில் மூன்று தங்க பதக்கங்களை வென்றவர்தான் தம்பி ரமேஷ் சண்முகம் அவர்கள். சர்வதேசப் போட்டிகளிலும் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று நம் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவர்தான் அருமை சகோதரர் ரமேஷ் அவர்கள்.

தம்பி ரமேஷ் சண்முகத்தின் திறமையை அங்கீகரிக்கும் விதமாக, இன்றைக்கு சுமார் 9 லட்சம் அளவில், விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் உதவிகள் செய்யப்படுகின்றன.. அதேபோல், தங்கை கீர்த்திகா ஜெயச்சந்திரன் இங்கு வருகை தந்துள்ளார். கேலோ இந்தியா பாரா விளையாட்டுப்போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்று சாதனைப் படைத்தவர்தான் சகோதரி அவர்கள். சர்வதேசப் போட்டிகளில் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளார். இருவருக்கும் நமது பாராட்டுகளையும்,



வாழ்த்துகளையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வோம்.

**உங்களின் வெற்றி நம் அரசின் வெற்றி!**

உங்களின் வெற்றியை நம் அரசின் வெற்றியாக ஒவ்வொரு முறையும் நம் முதலமைச்சர் அவர்களும், நமது அரசும் கருதுகிறது. அதனால்தான் நீங்கள் வெற்றிபெற்றவுடனே, உங்களை அழைத்து உயரிய ஊக்கத்தொகையை, நம் அரசு வழங்கிகொண்டு இருக்கிறது. நம் அரசு அமைந்தது முதல் மொத்தம் 258 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு 27 கோடியே 18 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றின் தொடர்ச்சியாகதான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. பொதுவாக, விளையாட்டு வீரர்களைப் பார்க்கும்போது, நமக்கு ஒரு சக்தி (Energy) கிடைக்கும். ஆனால், மாற்றுத்திறனாளி வீரர்கள், உங்களைப் பார்க்கும் போது, சக்தியுடன் சேர்த்து கூடுதலாக தன்னம்பிக்கையும் (Confidence) கிடைக்கும். ஏனென்றால், வெற்றிக்குத் திறமை மட்டும் போதாது. அந்த திறமையை வெளிப்படுத்துவதற்கான தன்னம்பிக்கை மிக மிக அவசியம். அந்தத் தன்னம்பிக்கை, மாற்றுத்திறனாளி வீரர்களான உங்களிடம் இருந்துதான் கிடைக்கிறது.

**தனி அக்கறை உண்டு**

மாற்றுத்திறனாளி வீரர்கள் மீது நம் முதலமைச்சர் அவர்களுக்கு எப்போதுமே தனி அக்கறை உண்டு. மாற்றுத்திறனாளி வீரர்கள் பல வெளிநாடுகளுக்குச் செல்கிறீர்கள். அப்படி நீங்கள் செல்லும்போது, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில இருந்து நிதி கொடுக்கிறோம். நிதியுதவி பெற்றுச் செல்லும் போது, நீங்கள் சொல்கிறீர்கள் கண்டிப்பாக, நாங்கள் வெற்றிபெற்றுத் திரும்பி வருகிறோம் என்று சொல்கிறீர்கள். அதே போல் நீங்கள் வெற்றிபெற்று பதக்கத்தோடு வருகிறீர்கள். பாராட்டுகின்ற வகையில், இதுமாதிரி உயரிய ஊக்கத் தொகையை வழங்குகிறோம்.

இதுவரை, 198 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு 5 கோடியே 29 இலட்சம் ரூபாய் அளவுக்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து மட்டும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், எஸ்.டி.ஏ.டிஇன் எலைட், எம்.ஐ.எம்.எஸ், சி.டி.எஸ் திட்டத்தில் மாற்றுத்திறனாளி வீரர்கள் பயன் பெற்று வருகிறீர்கள். விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ், மாற்றுத்திறன் வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளைத் தொடர்ந்து நம் அரசு செய்து வருகிறது. அதுமட்டுமல்ல, மாற்றுத்திறனாளி வீரர்களின் முன்னேற்றத்துக்கு இந்த பட்ஜெட்டில்கூட ஏராளமான அறிவிப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்.

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி என 6 இடங்களில் 7 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அவைகள் எல்லாம் திறக்கப்படும்.

**ரூ.7 கோடியே 5 இலட்சம்**

இந்த முயற்சிக்குக் கிடைக்கும் ஆதரவைத் தொடர்ந்து, இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார். திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 மாவட்டங்களிலும் 7 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய பாரா ஸ்போர்ட்ஸ் அரீனாஸ் (Para Sports Arenas) அமைக்க, முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். அந்தப் பணிகளும் துவங்க இருக்கின்றன.

உங்களின் கோரிக்கையினை ஏற்று, சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விடுதி அமைக்கப்பட உள்ளது. விளையாட்டுத்துறை மட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகள் நலனைப் பொறுத்தவரைக்கும் கழக அரசு எப்போதுமே தனி அக்கறை செலுத்தும் என்பது உங்களுக்கே தெரியும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் பணிகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவிகிதம் இடஒதுக்கீட்டை வழங்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டில் புதிதாக கட்டப்படும் அரசுக் கட்டடங்கள் அனைத்திலும் மாற்றுத்திறனாளிகள் சென்று வருவதற்காக (ரேம்ப்) ramp வசதி அமைக்கப்படும் என்று உத்தரவிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தனித்துறையையும் வாரியத்தையும் உருவாக்கியவர் கலைஞர் அவர்கள். அந்தத்துறை தற்போது நம் முதலமைச்சர் அவர்களின் கீழ் இயங்குகிறது. அதே போல மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் - சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் செயல்பட்டு வருகிறது.

சென்னை மெரினா, பெசன்ட் நகர் கடற்கரைகளின் கடல் அலைகளை கோடிக்கணக்கான கால்கள் நனைந்திருக்கும். ஆனால், மாற்றுத் திறனாளிகளுடைய கால்களையும் அந்தக் கடல் அலைகள் தொட வேண்டும் என்பதற்காக, நீளமான Rampகளை நம் ஆட்சியில் அமைத்திருக்கிறோம்.

மாற்றுத்திறனாளிகளுக்காக நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்கள். தமிழ்நாட்டின் நகர்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமன முறையில் பதவி வழங்கப்படும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

**திராவிட மாடல் அரசு**

சமுதாயத்தில் விளிம்புநிலையில் இருக்கும் மக்களை கைகொடுத்து தூக்கி விட வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கம் எங்களுக்குக் கற்றுத் தந்த பாடம். அந்தப் பாடத்தின் அடிப்படையில் தான், திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நீங்கள் பெறும் ஒவ்வொரு பதக்கமும், வெற்றியும் இந்த உலகில் எங்கோ ஒரு மூலையில் வாழும் ஒரு மாற்றுத்திறனாளியின் மனதில் ஒரு தன்னம்பிக்கையை ஊட்டும் என்று நிச்சயமாக நாங்கள் நம்புகிறோம். ஆகவே, உங்களிடம் நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் தொடர்ந்து பல சாதனைகளை படைக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளி வீரர்களின் வளர்ச்சிக்கு நம்முடைய அரசு அயராது உழைக்கும் என்று சொல்லி, உயரிய ஊக்கத்தொகையைப் பெற்றுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் இராமச்சந்திரன், அசோக் சிகாமணி, விளையாட்டு மேம்பாட்டுதுறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி, பாரா தடகள வீரர் ரமேஷ் சண்முகம், வீராங்கனை கீர்த்திகா ஜெயச்சந்திரன், டி.ஆர்.ஓ. மணிகண்டன், எஸ்.டி.ஏ.டி.யின் பொது மேலாளர் சுஜாதா உள்பட விளையாட்டு வீரர் வீராங்கனைகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

## துணிச்சலான, தைரியமான உச்சநீதிமன்றத் தீர்ப்பு!

# ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி விலக வேண்டும்!

## ‘இந்தியா டுடே’ ஆங்கில ஊடகத்திற்கு – முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோகத்கி பேட்டி!

**புதுடெல்லி, ஏப்.11 -**

**“உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்று தமிழ்நாடு ஆளுநர் பதவி விலக வேண்டும்” என்று ஒன்றிய அரசின் முன்னாள் அட்டர்னி ஜெனரலும் ஆளுநரை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் வாதாடியவருமான முகுல் ரோகத்கி அவர்கள் “இந்தியா டுடே” ஆங்கில ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

மூத்த வழக்கறிஞர் முகுல் ரோகத்கி அவர்கள் ‘இந்தியா டுடே’ ஊடகத்திற்கு அளித்த பேட்டி வருமாறு :-

**நெறியாளர் ராஜ்தீப் சர்தேசாய்:** இப்போதைய உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பிற்குப் பின்னர் தமிழ்நாடு ஆளுநர் தார்மீக பொறுப்பேற்று பதவிவிலக வேண்டுமா?

**முகுல் ரோகத்கி:** முதலில் இது புதிய பாதையை உருவாக்கும் தீர்ப்பு. துணிச்சலான, தைரியமான தீர்ப்பு. மிக அரிதாக இதுபோன்ற தீர்ப்புகள் வரும். அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநிறுத்தியதற்காக உச்சநீதிமன்றத்தைப் பாராட்டுகிறேன். கவர்னராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அனைவரும் அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். கவர்னர் மாநில அரசுக்கு தடையாக இருக்ககூடாது, மாறாக வினையூக்கியாக இருக்கவேண்டும் என்று பொருள்பொதிந்த முறையில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மக்கள் தான் அனைவருக்கும் மேலானவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்களை பிரதிநிதித்துவப்படுத்து கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்டமியற்றுமானால் ஆளுநருக்கு மூன்று வாய்ப்புகள் உள்ளன. சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொண்டால் உடனடியாக சட்டமாகும் அல்லது அரசின் மறுபரிசீலனைக்கு அனுப்பலாம். மறுபரிசீலனைக்கு அனுப்பிய மசோதாவை அரசு திரும்பவும் ஆளுநருக்கு அனுப்பினால், ஆளுநருக்கு வேறு வழியில்லை. ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்கவேண்டும். நிதி மசோதா எனில் ஆளுநர் திருப்பி அனுப்ப இயலாது. மூன்றாவதாக, மாநில அரசின் சட்டத்திற்கும் ஒன்றிய அரசின் சட்டத்திற்கும் மோதல் இருப்பதாக ஆளுநர் கருதினால், குடியரசு தலைவருக்கு அனுப்பலாம். இதைத் தவிர வேறு எதையும் ஆளுநரால் செய்யமுடியாது.




**மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. ஆளுநரின் காலம் தாழ்த்தும் செயலைக் குறிப்பிட்டே இவ்வழக்கில் என் வாதத்தைத் தொடங்கினேன். மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் போதுமான கால அவகாசம் அளித்தபோதும் ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டார். இந்நிலையில் ஆளுநரின் செயல் தவறானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே ஆளுநர் பதவி விலக வேண்டும்.**

**ராஜ்தீப் சர்தேசாய்:** ஆனால் ஆளுநர் அவ்வாறு எவ்வித சைகைகளையும் காட்டவில்லையே. தமிழ்நாட்டில் மட்டுமல்ல. எதிர்க்கட்சிகள் ஆளும் கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களிலும் ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் பிரச்சினை உள்ளதே. இத்தீர்ப்பு அந்த மாநிலங்களிலும் எதிரொலிக்குமா?

**முகுல் ரோகத்கி:** ஆளுநர் பதவி விலகுவது அவரது தனிப்பட்ட முடிவு. ஆளுநர் பதவி மீது உயர்மதிப்பு கொண்டிருப்பாரெனில் அவர் பதவி விலகவேண்டும். கேரளாவிலும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு உள்ளது, ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் பிரச்சினைகளை இத்தீர்ப்பு சரி செய்யுமா என்பதை விட, அரசியலமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 141 ஆவது பிரிவின் படி உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு அனைவரும் கட்டுப்பட்டவர்கள்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு நாடாளுமன்றச் சட்டத்திற்குச் சமமானது. உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு நாடாளுமன்றமும் கட்டுப்பட வேண்டும். உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டால் எதுவும் மாறாது என்று நினைப்பது தவறு. இன்னொரு காரணத்திற்கும் இத்தீர்ப்பு முன்னுதாரணமானது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க கால அவகாசத்தையும் உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஒரு மாதத்தில் ஒப்புதல் அளிக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் மூன்று மாதத்தில் ஒப்புதல் அளிக்கவேண்டும். சட்டமன்றத்தை ஆளுநர் முடக்கமுடியாது என்று சொற்களை உச்சநீதிமன்றம் பயன்படுத்தியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் அரசியலமைப்புச் சட்டப்படி செயல்படுகிறது. சட்டமன்றத்தை ஆளுநர் முடக்க முடியாது.

**ராஜ்தீப் சர்தேசாய்:** இத்தீர்ப்பு ஆளுநர் நியமனத்தைப் பாதிக்குமா? ஆளுநர்கள் ஒன்றிய அரசின் பிரதிநிதிகளாக செயல்படுகிறார்களே?

**முகுல் ரோகத்கி:** 75 ஆண்டுகளாக ஆளுநர்கள் ஒரே மாதிரியாக ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டு வருகின்றனர். என்னைப் பொறுத்த வரையில் ஆளுநர் பதவியை ஒழிக்கவேண்டும். ஆளுநர் பதவி என்பது அடையாளப் பதவி மட்டுமே. அடையாளப் பதவிக்கு ஏன் இவ்வளவு பணம் செலவழிக்கவேண்டும்? இன்றைய காலத்தில் ஆளுநர் பதவிக்கு என்ன தேவை உள்ளது? தேர்தல் காலத்தில் பதவிப்பிரமாணம் செய்ய மட்டுமே ஆளுநர் தேவைப்படுகிறார். அதைக்கூட சட்டத்தின் மூலம் மாற்றிவிடலாம். சபாநாயகருக்கு கூடத் தரலாம். வேறு ஒருவருக்கு கூட அந்தப் பொறுப்பைத் தரலாம். பதவிப் பிரமாணம் செய்து வைக்க மட்டுமே தேவைப்படும் ஆளுநர் பதவியை ஒழித்து விடலாம்.

மக்களுக்கு மேல் மன்னர் தேவையில்லை. நீதிபதிகளை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியே நியமிக்கலாம் என்ற வாதம் எழுந்தபோது மக்களுக்கு மத்தியில் மன்னர் தேவையில்லை என்று அம்பேத்கர் சொன்னார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு அப்பொறுப்பைத் தர மறுத்துவிட்டார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர் தான். உச்சநீதிமன்ற நீதிமன்ற நீதிபதிக்கு இது பொருந்துமெனில் ஆளுநருக்கும் பொருந்தும்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் முகுல் ரோகத்கி பேட்டியளித்தார்.

